நிலா காமிக்ஸ்

# கல்கியின் பொன்னியின் செல்வன் காமிக்ஸ்

## புது வெள்ளம்

விண்ணகரக் கோயில், கடம்பூர் மாளிகை




2

தலைமை - படைப்பு - உருவாக்கம்

## மு.கார்த்திகேயன்

## பங்களிப்பு

| | | |
|---|---|---|
| வரைகலை | : | மு. கார்த்திகேயன். |
| வண்ணங்கள் | : | இரா.ம. சித்தார்த்தன், நா. ஸ்ரீகாந்த். |
| எழுத்து வடிவங்கள் | : | பா. சுந்தரராஜன். |
| ஒழுங்கமைப்பு | : | த. சத்தியன், இரா. ஸ்ரீராம். |
| மொழியாள்கை | : | சரவணராஜா |
| தொழில் நுட்ப உதவி | : | நா. பிரசாந்த். |


தொடர்புக்கு

NILA COMICS

W-100, 2nd floor, 2nd Avenue, Anna Nagar, Chennai - 600 040, India.

Contact no: 044-2621 3146, 98848 06302

Email:sales@nilacomics.com

Facebook.com/ponniyinselvananimation

www.nilacomics.com



© PSN Entertainment Pvt Ltd. 2017.

All rights reserved. No Artwork of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying,recording or otherwise, without the prior permission of PSN Entertainment Pvt. Ltd.



eBook ISBN : 978-81-935228-4-4

கல்கியின்

# பொன்னியின் செல்வன்

காமிக்ஸ்

## புது வெள்ளம்

விண்ணகரக் கோயில்
கடம்பூர் மாளிகை

நிலா
காமிக்ஸ்

www.nilacomics.com


# பதிப்புரை




அன்புள்ள வாசகர்களே,

கல்கி அவர்களின் பொன்னியின் செல்வன், நம் தமிழ் வரலாற்று நூல்களின் சிகரம். தமிழ் மண்ணை ஆண்ட மன்னர்களின் வீரம், தீரம், பக்தி, என சிறப்புகள் வாய்ந்த சோழர்களின் பொற்கால ஆட்சியை, நம் கண் முன்னே தன் எழுத்துகளின் வலிமையால் அழகாக நிறுத்தியவர் கல்கி. இன்றைய இளையோரும் அடுத்த தலைமுறையும் இந்த கதைகளை படக்கதைகள் (comics) மூலம் படித்து, மகிழ்ச்சியடைய வேண்டுமென்கின்ற எண்ணத்தில் உருவானதே "நிலா காமிக்ஸ்"-ன் இந்த முயற்சி. இதை குழந்தைகள், இளைஞர்கள், மட்டுமல்லாமல் குறிப்பாக இந்த காவியத்தின் தீவிர வாசகர்கள் படித்து, விரும்புவார்கள் என நம்பு கிறோம். இது ஒரு தொடர் வெளியீடாக, மாதம் இருமுறை புத்தகமாக வெளிவர உள்ளது. இது மென்பொருளாகவும் கிடைக்கும், (online). தமிழ் கூறும் நல் உலகின் வாழ்த்துகளை கோருகிறோம்.


நன்றி,
சரவணராஜா பொன்னுசாமி,
சென்னை.


வாசகர்களே,
நமது நாயகன் வந்தியத்தேவனை நாம் எங்கே விட்டுவிட்டு வந்தோம்? ஆம்! சமயச்சண்டையில் அந்த வீர வைஷ்ணவன் தடியை சுழற்றி தாக்க வரும் போது அல்லவா விட்டுவிட்டு வந்தோம். அப்போது அங்கு சோழ நாட்டின் தனாதிகாரி தனது பரிவாரங்களுடன் அவ்வழியாக யானை மேல் வந்தாரே, என்ன நடந்ததோ. வாருங்கள் விரைவாக சென்று என்ன நடக்கிறது என்று பார்ப்போம்.



சூராதி சூரர்! வீரப்பிரதாபர்! மாறபாண்டியன் படையை வீறு கொண்டு தாக்கி வேரோடு அறுத்த வெற்றிவேல் உடையார்!
இருபத்து நான்கு போர்களில் சண்டையிட்டு, அறுபத்து நான்கு விழுப்புண்களை பெற்ற திருமேனியர்!
சோழ நாட்டு தனாதிகாரி, தான்யபண்டார நாயகர், இறைவிதிக்கும் தேவர், பெரிய பழுவேட்டரையர் விஜயம் செய்கிறார்.... பராக்... பராக்...



பழுவேட்டரையரே நேரடியாக கடம்பூருக்கு வருகிறார் என்றால், நிச்சயம் ஏதோ முக்கியமான விஷயமாகத் தான் இருக்கனும்!
உனக்கு தெரியாதா? அந்த விஷயம் நம்ம இளவரசி மணிமேகலையை கண்டராதித்தரின் மகன் மதுராந்தக நுக்கு மணம் முடிக்க போறதா ஊர்ல பேசிக்கிறாங்க...
அவருக்கு தான் ஏற்கனவே திரு மணம் ஆயிருச்சே!
நம்மமாதிரி சம்சாரிக்குத்தான் ஒரு திருமணம், அவங்க எல்லாம் அரசியல் காரணத்துக்காக பல திருமணங்கள் செஞ்சுக்குவாங்க.
ஆமா... அந்த மூடு பல்லக்குல போறது யாரு?
பழுவூர் ராணியாகத்தான் இருக்கமுடியும்.
எந்த பழுவூர் ராணியச் சொல்ற?
வேற யாரு? பாண்டிய நாட்டு யுத்தத்துக்கு போயிட்டு வரும் போது... ஒரு பெண்ணை கூட்டிட்டு வந்தாரே, அவங்களாகத் தான் இருக்கும்.
அவங்க பேரழகியாமே...!
அதான் பழுவேட்டரையர் மூடுபல்லக்கில் கூட்டிட்டு போறாரு...
ஆழ்வார்க்கடியான் எப்படியாவது அந்த மூடுபல்லக்கில் செல்லும் நபரிடம் ஒரு ஓலையை கொடுக்க எண்ணுகிறான்.


பெரிய பழுவேட்டரையர் பாண்டிய நாட்டு வெற்றிக்கு பிறகு, தான் வரும் வழியில் ஒரு அழகிய பெண்ணை சந்திக்கிறார். அவள் பெயர் நந்தினி. அவள் அழகில் மயங்கி அவளை தனது ஆசை நாயகியாக்கிக்கொள்கிறார். அது குறித்து மக்கள் பலரும் பலவாறு பேசிக்கொள்கிறார்கள்.
ஆழ்வார்க்கடியான் பல்லக்கில் இருக்கும் உருவத்தை கூர்ந்து கவனிக்கிறான்.
பல்லக்கிலிருந்த உருவம் திரையை விலக்கி வெளியே எட்டி பார்க்கிறது.
ஆழ்வார்க்கடியானை கண்டதும் சட்டென்று திரையை மூடிக்கொள்கிறது.



ஆழ்வார்க்கடியான் சோழநாட்டின் முதன்மை மந்திரியான அநிருத்தபிரம்மராயரின் சீடன்.



குருநாதர் கொடுத்த ஓலையை எப்படியாவது கொடுத்து விடலாம் என்றால், அதற்கான சந்தர்ப்பம் கிடைக்காமல் போயிற்றே... அப்படியென்றால், கடம்பூர் சென்று தான் முயற்சித்து பார்க்க வேண்டும். ஆனால், கடம்பூர் அரண்மனைக்கு உள்ளே நம்மை அனுமதிக்க மாட்டார்களே... ம்...




பல்லக்கில் செல்லும் பெண்ணை நினைத்து.
ஆஹா எத்தனை அழகு! அவளின் கையே இத்தனை அழகு என்றால், அவளின் முகம்...
இவ்வாறு வந்தியத்தேவன் ரசித்துக் கொண்டிருக்கையில், பழுவேட்டரையரின் ஆட்கள் குதிரையிடம் வம்பு செய்கிறார்கள்.
டேய் இந்த குருதைய பாருடா...
இது குருதை இல்லைடா, குதிரை....
டேய்... உங்க இலக்கோணை ஆராய்ச்சி இருக்கட்டும், அது குதிரையா இல்ல கழுதையான்னு பாருங்கடா....?
பழுவேட்டரையரின் ஆட்கள் தன் குதிரையிடம் செய்யும் சேட்டையை, தூரத்திலிருந்து கோபத்துடன் பார்த்துக் கொண்டிருக்கின்றான்.
இவனெல்லாம் ஒரு ஆளு... இவன் நம்ம மேல ஏறபார்க்கிறான், விடக்கூடாது.



குதிரை அவனை ஏற விடாமல் திமிறுகிறது.
இது பொல்லாத குதிரைடா இதன் மேல நான் ஏறக் கூடாதாம்...
பரம்பரையான அரசகுலத்துல வந்தவன் தான் ஏறனுமா...ம்மா? ம்... அதையும் தான் சோதித்து பார்த்துவிடலாம்.



ஆனால் குதிரை அவனை தன் மீது ஏற விடாமல் தள்ளிவிடுகிறது.
நான் அப்போதே சொல்லல அது குதிரை இல்லடா, கழுதேன்னு...
ஆ ஆ ஆ....


இந்த குதிரை யாருடையதாக இருக்கும்? ஒரு வேளை நம்மிடம் துடுக்கா பேசினானே அவனுடையதாக இருக்குமோ? நிச்சயம் அந்த வாலிபனுடையதாகத் தான் இருக்கும். சரி... அவனிடம் ஏதாவது பேச்சு கொடுத்தால் நமக்கு கடம்பூர் செல்ல வழி கிடைத்தாலும் கிடைக்கும்.


டேய்... அந்த கழுதையை பிடிச்சு கட்டுங்கடா...
பழுவேட்டரையரின் ஆட்கள் தன் குதிரையிடம் செய்யும் சேட்டையை கண்டு, வந்தியத்தேவனின் கை தானாகவே தன் உறை வாளுக்கு செல்கிறது. அவர்களை ஒரு கை பார்த்துவிடலாம் என்று எண்ணுகிறான். அப்போது தனது நண்பனும், எஜமானும் ஆன கரிகாலன் கூறியது நினைவுக்கு வருகிறது.


காஞ்சி அரண்மனை.
வந்தியத்தேவா நீ சிறந்த அறிவாளி என்று நம்பி, இந்த ஓலையை உன்னிடம் ஒப்படைக்கின்றேன். ஒன்று சக்கரவர்த்தியிடமும், மற்றொன்று என் சகோதரி குந்தவையிடமும் சேர்க்க வேண்டும். நீ என்னிடம் இருந்து ஓலை கொண்டு செல்வது யாருக்கும் தெரியக்கூடாது. முக்கியமாக பழுவேட்டரையரிடமும், எனது சிறிய தந்தை மதுராந்தகரிடமும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்!



மீண்டும் ஒரு முறை எச்சரித்து...
வந்தியத்தேவா ! நீ மாவீரன் என்பதை நான் நன்கறிவேன். நீ அதை நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை. ஆகையால், வலிய வரும் சண்டையிலிருந்து விலகிக் கொள்வதால் உனக்கு கௌரவக் குறைச்சல் ஒன்றும் வந்துவிடாது. இதை நீ நமது நட்பிற்காக செய்ய வேண்டும்.


என்று கூறியது அவன் நினைவுக்கு வருகிறது.
ஆகையால், பழுவேட்டரையரின் ஆட்களுக்கு வேறு ஒரு நல்ல சந்தர்ப்பத்தில் பாடம் புகட்டலாம் என்று தனக்கு தானே சமதானப்படுத்திக் கொள்கிறான்.


பழுவேட்டரையரின் வீரர்களில் ஒருவன் குதிரையின் வாலை பிடித்து முறுக்கிவிடுகிறான். குதிரை கூட்டத்தினுள் சீறிப்பாய்ந்து ஓடுகிறது.


ஆ...ஆ...ஆ
ஹா..ஹா...
ஹா..ஹா...
ஹா..ஹா
என்ன தம்பி! உன் வீர தீரத்தை அவர்களிடம் காட்ட வேண்டியது தானே?
ஆழ்வார்க்கடியான் கூறியதை கேட்டு வந்தியத்தேவனுக்கு ஆத்திரம் வருகிறது. ஆனாலும் தன் உறை வாளை வேகமாக உள்ளே தள்ளுகிறான்.



இவன் நம்மை விடமாட்டான் போலிருக்கிறதே...
சரி... சரி... அதை விடு... நீ கடம்பூர் தானே போற...
இந்த வைஷ்ணவனுக்கு இதெல்லாம் எப்படி தெரியுது!
என்ன தம்பி யோசிக்கிறாய்?
உனக்கு மந்திரம் தந்திரம் தெரியுமா என்ன? நான் கடம்பூர் போவது உனக்கு எப்படி தெரியும்?
இதில் என்ன அதிசயம் தம்பி, இன்றைக்கு பல ஊர்களிலிருந்து விருந்தாளிகள் கடம்பூருக்கு வருகிறார்கள். உன்னை பார்த்தாலும் பெரிய இடத்து பிள்ளையை போல் இருப்பதால் கேட்டேன்.
உண்மையாகவா சொல்கிறீர்?
இதை கேட்ட வந்தியத்தேவனுக்கு மனதிற்குள் மகிழ்ச்சி ஏற்படுகிறது. இது அனைவருக்கும் இயல்பானது தானே.



இந்த வைஷ்ணவன் நம்மிடம் ஏதோ விஷயத்தை கறக்க பார்க்கிறான்... அவனா, நானா என்று பார்த்துவிடுவோம்.
தம்பி, எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா?
இந்த பகுதிக்கு நானே புதியவன். என்னால் என்ன உதவி செய்ய முடியும்?
இன்றிரவு என்னை கடம்பூர் அரண்மனைக்கு அழைத்துச் செல்ல முடியுமா?
எதற்காக? அங்கே யாராவது வீரசைவர் வருகிறாரா? அவரிடம் சிவன் பெரிய தெய்வமா இல்லை விஷ்ணு பெரிய தெய்வமா? என்று விவாதிப்பதற்கா?
இல்லை... இல்லை, சண்டை பிடிப்பதே என் வேலை என்று நினைக்க வேண்டாம். இன்றிரவு அங்கு பெரிய விருந்தும், விருந்துக்கு பின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற போகிறது. எனக்கு குரவைக் கூத்து பார்க்க வேண்டும் என்று ஆசை...
அப்படி இருந்தாலும் நான் எப்படி உன்னை அழைத்து போக முடியும்?
என்னை உன் பணியாளன் என்று சொன்னால் போகிறது...


அந்த மாதிரி ஏமாற்று மோசடிக்கெல்லாம் நீ வேறு யாரையாவது பார்க்க வேண்டும். உன்னை போன்ற பணியாளன் எனக்கு தேவையில்லை. சொன்னால் யாரும் நம்பவும் மாட்டார்கள்.
நீ சொல்வதையெல்லாம் பார்த்தால் என்னையே இன்று கோட்டைக்குள் விடுவார்களா? என்று சந்தேகம் உண்டாகிறது.
என்று கூறிவிட்டு வந்தியத்தேவன் கோபமாக அங்கிருந்து செல்கிறான். அவனை விடாமல் பின் தொடர்ந்து ஆழ்வார்க்கடியானும் செல்கிறான்.



ஆழ்வாக்கடியான் தன்னை பின் தொடர்வதை கண்ட வந்தியத்தேவன்,
என்னை ஏன் இன்னும் நீ பின் தொடர்ந்து வருகிறாய் ?
அந்த கேள்வியை நானும் திருப்பிக் கேட்கலாமா ?
வழி தெரியாத குற்றத்தினால் தான். ஆமா, அப்போ நீர் எங்கு போகிறீர்? கடம்பூருக்குத் தானே?
நீ தான் என்னை அழைத்து செல்லமாட்டேன் என்று கூறி விட்டாயே, நான் விண்ணகரக் கோவிலுக்குப் போகிறேன்.
வீரநாராயணப் பெருமாள் சன்னிதிக்குத் தானே?
ஆமாம்.
அப்படியென்றால் நானும் உன்னுடன் வருகிறேன்.
ஒரு வேளை, நீ விஷ்ணு ஆலயத்திற்கு வரமாட்டாய் என்று பார்த்தேன்.




தம்பி... இங்கே ஈஸ்வர முனிகள் என்ற பட்டர், பெருமாளுக்கு கைங்கரியம் செய்து கொண்டிருக்கிறார். அவர் ஒரு பெரிய மகான்.
நானும் கேள்விப் பட்டிருக்கின்றேன்.
ஆமாம்... இங்கே ஒரே கொண்டாட் டமாக இருக்கிறதே. இன்று ஏதா வது முக்கிய திருநாளா?
திருநாளே... தான். இன்று ஆடி பதினெட்டு. அதோடு, ஆண்டாளின் திருநட்சத்தி ரமும் சேர்ந்து கொண்டது.
அம்பி நமஸ்காரம், விவாதம் முடிந்துடுத்தா? பிள்ளையாண் டான் யாரு, நோக்கு வேண்டிய பட்டவனா?
ஆமாம்
ஆழ்வார்க்கடியானும், வந்தியத்தேவனும் பேசிக்கொண்டே வீரநாராயணப் பெருமாள் கோயிலுக்கு செல்கின்றனர்.


விஜயாலய சோழனின் பேரன் முதற் பராந்தகசோழன். அவனே மதுரையும், ஈழமும் கொண்ட கோப்பரகேசரி என்ற பட்டம் பெற்றவன். சோழப் பேரரசுக்கு அஸ்திவாரம் அமைத்தவன் அவனே. தில்லைச் சிற்றம்பலத்துக்கு பொன் கூரை வேய்ந்து சரித்திரப் புகழ் பெற்றவன். சோழ சிகாமணி, சூரசிகாமணி முதலிய பல விருது பெயர்களோடு, வீரநாராயணன் எனும் சிறப்பு பெயரையும் அவன் கொண்டிருந்தான். அவனின் மகன் இராஜாதித்தன், தனது தந்தையின் பெயரால், மக்களுக்கு பயன் பெற உருவாக்கியதே வீரநாராயண ஏரி. அதன் கரையை காப்பதற்கு, ஸ்ரீமத் நாராயணமூர்த்திக்கு ஆலயம் எழுப்பியிருந்தார்கள். நீர் நிலையங்களை காப்பதற்கு ஸ்ரீமத் நாராயணமூர்த்திக்கு ஆலயம் எழுப்புவது அக்கால வழக்கம். அந்த ஆலயத்திற்குத்தான் ஆழ்வார்க்கடியானும், வந்தியத்தேவனும் செல்கின்றனர். நாமும் அவர்களுடன் செல்வோம்.


"பொலிக பொலிக பொலிக
போயிற்று வல்லுயிர்ச்சாபம்
நலியும் நரகமும் நைந்த
நமனுக் கிங்கு யாதொன்றுமில்லை
கலியும் கெடும் கண்டு கொள்மின்
கடல் வண்ணன் பூதங்கள் மண்மேல்
மலியப் புகுந்து இசைபாடி
ஆடி உழி தரக் கண்டோம்!
கண்டோம் கண்டோம் கண்டோம்
கண்ணுக் கினியன கண்டோம்!
தொண்டீர் எல்லீரும் வாரீர்!
தொழுது தொழுது நின்றார்த்தும்!
வண்டார் தண்ணந் துழாயான்
மாதவன் பூதங்கள் மண்மேல்
பண்டான் பாடி நின்றாடிப்
பரந்து திரிகின்றனவே!"
(ஆழ்வார்க்கடியான் மனமுருகி பாடுவதை கண்ட வந்தியத்தேவன்.) ஆஹா, அற்புதமாக பாடுகிறானே! இவனை ஒரு முரட்டு வைஷ்ணவன் என்றல்லவா நினைத்தேன்.



ஆழ்வார்க்கடியானுடன் சேர்ந்து, ஒரு சிறுவனும் மழலைக் குரலில் பாடுகிறான். அதை அங்கிருப்பவர்கள் அனைவரும் கேட்டு மகிழ்கின்றனர்.


வாசகர்களே...
நன்னா பெருமாளை சேவிச்சிக்கோங்கோ.
ஆழ்வார்க்கடியான் மனமுருகி பாசூரத்தை பாடி முடிக்கிறான்.



ஆழ்வார்க்கடியான் பாடி முடித்தவுடன் பட்டரின் மகன் தன் தந்தையிடம், ஆழ்வார்க்கடியானிடமிருந்து மேலும் பல பாசுரங்களை கற்க விரும்புவதாக கூறுகிறான்.
ஐயா, நம்மாழ்வார் மொத்தம் ஆயிரம் பாசுரங்கள் பாடியிருப்பதாகத் தெரிகிறதே, அவ்வளவும் உமக்கு தெரியுமா?
அடியேன் அவ்வளவு பாக்கியம் செய்யவில்லை. சில பத்துக்கள் தான் எனக்கு தெரியும்.
தெரிந்தவரை என் பிள்ளைக்கு சொல்லிக்கொடுக்க வேண்டும்.
பால் வடியும் முகம் கொண்ட இந்த சிறுவன், பின்னாளில் நாதமுனிகள் என்ற பெயருடன் ஆச்சாரிய பரம்பரையில் முதல் ஆச்சாரியர் ஆகப்போகிறான்.


வந்தியத்தேவனும், ஆழ்வார்க்கடியானும் பேசிக் கொண்டே, பெருமாள் கோயில் பிரகாரத்தில் பிரசாதம் சாப்பிடுகிறார்கள். பின் அங்கிருந்து புறப்படுகிறார்கள்.
நம்பிகளே... தாங்கள் இத்தகைய பரம பக்தர் என்று எனக்கு தெரியாமல் போயிற்று. ஏதாவது தவறாக பேசியிருந்தால் மன்னிக்க வேண்டும்.
மன்னித்துவிடுகிறேன் தம்பி. ஆனால், இப்போது நீ எனக்கு ஒரு உதவி செய்வாயா சொல்லு?
தாங்கள் கேட்கும் உதவியைதான் என்னால் முடியாது என்று சொன்னேனே? நீங்களும் ஒப்புக்கொண்டீர்களே?
இது வேறு விஷயம் தம்பி. நான் ஒரு ஓலையை கொடுக் கிறேன். நீ கடம்பூர் அரண் மனையில் தங்கினால் தக்க சமயம் பார்த்து ஒருவரிடம் அதைக் கொடுக்க வேண்டும்.
யாரிடம் ?
பழுவேட்டரையரின் மூடு பல்லக்கில் சென்றாளே அந்தப் பெண்ணிடம்.
வைஷ்ணவரே என்னை யார் என்று நினைத்தீர்கள்?
தம்பி படபடப்பு வேண்டாம். உன்னால் முடி யாது என்றால் மகராஜனாய் போய் வா.


குதிரையை நாம் மறந்துவிட்டோமே, குதிரைக்கு ஏற்பட்ட
அவமானத்திற்கு குதிரை ஒரு உயர்ந்த பாறையின்
உச்சிக்கு சென்று அதிலிருந்து குதித்துவிடலாமா?
என்ற யோசனையுடன் நின்று கொண்டிருக்கிறது.
வந்தியத்தேவனுக்கு கோபம்
வந்ததால் அந்த இடத்தை விட்டு
செல்ல குதிரையை அழைக்கிறான்.
தன் எஜமான் எழுப்பிய ஒலி
குதிரைக்கு கேட்கிறது.
தன் எஜமானின் உத்தரவை
புரிந்து கொண்டு குதிரை
விரைந்து வருகிறது.
தம்பி, நீ மட்டும் இப்போது
இந்த உதவி செய்வாயானால்
பின்னாளில் தக்க சமயத்தில்
நான் உதவி செய்வேன்.
வந்தியத்தேவன் ஆழ்வார்க்
கடியான் கூறுவதை காதில்
வாங்காமல் இருக்கிறான்.
தம்பி பின்னாளில்
என் உதவி உனக்கு
தேவைப்படும்.


மீண்டும் ஒரு முறை ஆழ்வார்க்கடியான் முயற்ச்சித்து பார்க்கிறான்.
தம்பி என்ன சொல்கிறாய்?


தம்பி....
தம்பி....
தம்பி....


தம்பி... தம்பி... என்று ஆழ்வார்க்கடியான் அழைக்க, அதை பொருட்படுத்தாமல் வந்தியத்தேவன் சென்று விடுகிறான்.
என்னை அழைத்து செல்லமாட்டேன் என்றா சொல்கிறாய்... உனக்கு முன் நான் கடம்பூர் செல்கிறேன் பார்.
அட, யார் இது? அந்த வைஷ்ணவனா! குதிரையை விட வேகமாக ஓடுகிறானே!
ஓடட்டும்... ஓடட்டும், எங்கே ஓடி விட போகிறான்.


கடம்பூர் கோட்டை
மேலக்கடம்பூர் அரண்மனை வீரநாராயண ஏரியிலிருந்து 12. கி.மீ. தொலைவில் உள்ளது. இப்பகுதியை செங்கண்ணர் சம்புவரையர் என்பவர், சோழப் பேரரசுக்கு உட்பட்டு ஆட்சி செய்து வருகிறார். சம்புவரையர்கள் வல்வில் ஓரியின் வம்சாவழி வந்தவர்கள் என்று தங்களை கூறிக்கொள்கிறார்கள்.



கடம்பூர் அரண்மனை ஒரே விழாக்கோலம் பூண்டிருக்கிறது.
கோட்டைக்குள் செல்பவர்கள், கோட்டை காவலர்களிடம் ஆதார அட்டை காண்பித்து செல்கின்றனர்.
ஐயா, என்னை தெரியாதவர் போல் சோதனை செய்கிறீர்களே... நான் வழக்கமாக அரண்மனைக்கு நெய் எடுத்து செல்பவன் தானே...
அதெல்லாம் சரிதான். இன்று வேறு விஷயம், இன்று ஆதார அட்டை இல்லாமல் யாரையும் உள்ளே விட வேண்டாம் என்பது எஜமானின் உத்தரவு.


காவலர்கள், சம்புவரையர்களின் முத்திரை பதித்த, செப்பு தகட்டினாலான ஆதார அட்டையை பரிசோதித்து, உள்ளே அனுமதிக்கின்றனர்.
நமது நாயகன் தூரத்திலிருந்து இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருக்கிறான்.
ஆதார அட்டையை காண்பிக்காமல் ஒரு செல்வந்தன் உள்ளே செல்கிறான்.
ஐயா, ஐயா...
தம்பி, நீ கொஞ்சம் சும்மாயிரு...
அவர் ஆதார அட்டையை காண்பிக்கவில்லையே...
தம்பி, நீ என்ன விவரம் இல்லாத ஆளாயிருக்கே! ஆளப்பார்த்தா தெரியாதா உனக்கு, அவர்கள் எல்லாம் சமூகத்துல பெரிய அந்தஸ்து உள்ளவங்க.

இதையெல்லாம் தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த வந்தியத்தேவன், ஒரு முடிவுக்கு வருகிறான். கோட்டைக்குள் செல்ல வேண்டும் என்றால் தன்னை ஒரு பெரிய ஆள் போல் காட்டிக்கொள்ள வேண்டும் என்று எண்ணி, உடனே செயலில் இறங்குகிறான்.



ஆனால், அவன் எதிர்பார்ப்புக்கு மாறாக கோட்டை காவலர்கள் அவனை தடுத்துவிடுகின்றனர்.





வாணர்குலத்தை சார்ந்தவன். வந்தியத்தேவன்.
ஓகோ! வாணர்குலத்தைச் சேர்ந்தவனா நீ?
பின்னாலிருந்து ஒருவன் குரங்கு போல் பாவனை செய்து...
என்னது... வானரகுலமா ?
வந்தியத்தேவன் அவனை திரும்பி பார்க்கிறான்.
நம்ம எஜமான் கிட்டேயும் சேட்டையை காட்ட ஆரம்பிச் சிட்டாங்களா, இனி இவர் களை சும்மா விடக்கூடாது.
ஷ்...
ஷ்...
டிஷ்....
குதிரை தன் பின்னங் காலால் காவலனை எட்டி உதைக்கிறது.
டி ங் ங் ங்.....


எட்டி உதைத்த குதிரை கோப மாக அவனை பார்க்கிறது.
க்ர்... க்ர்...
நான் அப்போதே சொன்னேன்ல அது குதிரையில்லடா... கழுதைன்னு...
ஹா..ஹா...
ஹா..ஹா...
குதிரையின் சுபாவத்தை அறிந்த வந்தியத்தேவன்.
இவன் தேவையில்லாமல் நம் குதிரையிடம் உதை வாங்க போகிறான்.
ஹா...ஹா..
குதிரை கோபத்துடன் அவனை மிரட்டும் விதமாக திரும்பி பார்க்கிறது.
ஹா..ஹா...
ஹா..ஹா...
ஹா..ஹா...
க்ர்... க்ர்...


குதிரையின் கோபத்தை கண்ட காவலன், உதைக்கு பயந்து தன் வாயை பொத்திக் கொள்கிறான்.
தலைமை காவலன்.
அந்த குதிரையை பிடித்து கட்டுங்கடா.
அடக்கடவுளே! நம்ம எஜமான் எவ்வளவு அடிச்சாலும் தாங்குவான் போல, இவனை நம்பினால் அவ்வளவு தான்.
(வந்தியத்தேவன் கம்பீரமான குரலில்) ம்... என் குதிரையை விடுங்கள்.
இப்பதான் நம் எஜமானுக்கு சூடு பிடிக்கிறது... ம்... பார்க்கலாம்.
இவன் நடை, உடை, பாவனை எல்லாம் பார்த்தால் பெரிய இடத்து பிள்ளை போல் தான் தெரிகிறது.



குதிரையை விடச்சொல்லுங்கள். நான் போகிறேன், உங்கள் நாட்டில் விருந்தாளிகளை இப்படித்தான் நடத்துவீர்களா?
இன்று வந்த விருந்தாளிகளிலே... கழுதை மேல் வந்தவன் இவன் ஒருவனாகத்தான் இருப்பான்.
குதிரையை விடுங்கள். (தலைமை காவலன் உத்தரவு.)
காவலன் குதிரையின் கடிவாளத்தை வேண்டுமென்றே இழுத்து விடுகிறான்.
வந்தியத்தேவன் நிலை தடுமாறுகிறான்.
ஹா..ஹா...
ஹா..ஹா
அனைவரும் அவனைப் பார்த்து கேலியாக சிரிக்கின்றனர்.



வந்தியத்தேவனுக்கு அடக்க முடியாத கோபம் வருகிறது. தன் நண்பன் கிகாலனுக்காக அதை வெளிக்காட்டாமல் அங்கிருந்து செல்கிறான்.
காவலர்கள், வந்தியத்தேவன் திரும்பி செல்வதை குறித்து கேலி பேசுகின்றனர்.
நண்பனுக்காக எவ்வளவோ பொறுத்துக் கொண்டோம், இனியும் நாம் சும்மாயிருந் தோமானால் நம் குலத்துக்கு அல்லவா இழுக்கு ஏற்படும். வருவது வரட்டும், இந்த மடையர்களுக்கு சரியான பாடம் புகட்டித் தான் வேண்டும்.
வந்தியத்தேவன் கோபத்தோடு குதிரையை கோட்டையை நோக்கி திருப்பி நிறுத்துகிறான்.



தன்மானத்தை நாம் தான் காத்துக்கொள்ள வேண்டும்.
வந்தியத்தேவன் எண்ணத்தை புரிந்துகொண்ட குதிரை, தான் தயார் என்பதை வந்தியத்தேவனுக்கு உணர்த்துகிறது.
தன் உறைவாளை உருவிக் கொண்டு, கோட்டையை நோக்கி சீறிப்பாய்கின்றான் வந்தியத்தேவன்.


கோட்டை காவலர்கள் அவனை தாக்க தயாராக இருக்கிறார்கள்.



அவனை உள்ளே விடக்கூடாது, ஜாக்கிரதை.
(கோட்டை தலைமை காவலன்)


பிடியுங்கள் அவனை...
விடாதே... பிடி...
விடாதே... பிடி...
ஆனால், அத்தனை தடைகளையும் மீறி வந்தியத்தேவன்
கடம்பூர் கோட்டைக்குள் நுழைகிறான்.


கடம்பூர் வீரர்கள் வந்தியத்தேவனை தாக்குகிறார்கள்.



வந்தியத்தேவனின் வாள் சுழல்கிறது. அவனை எதிர்
கொள்ள முடியாமல் கடம்பூர் வீரர்கள் திணறுகிறார்கள்.


ஆனால், மேன்மேலும் கடம்பூர் வீரர்கள் புற்றிலிருந்து ஈசல் புறப்பட்டு வருவதைப் போல், வந்து கொண்டே இருக்கிறார்கள்...


அபிமன்யுவை எதிரிகள் சூழ்ந்து கொண்டது போல், வந்தியத்தேவனை பலர் சூழ்ந்து கொண்டார்கள்.


இந்நேரத்தில் குதிரை ஒரு யுக்தியை மேற்கொண்டது. வேண்டுமென்றே தன் கால்களை மண்ணில் உதைத்து புழுதியை கிளப்பியது.
எழுந்த புழுதியில் கடம்பூர் வீரர்கள் திணறுகிறார்கள்.


...ஆஅச்
இச்சந்தர்ப்பத்தில் வந்தியத்தேவன்.
கந்தமாறா... கந்தமாறா...
என்று முழக்கமிட்டான்...
கந்தமாறா....
கடம்பூர் அரசர் செங்கண்ணர் சம்புவரையர் தன் மகனிடம்...
கந்தமாறா....
கந்தமாறா! அங்கு என்ன ஆர்ப்பாட்டம் என்று பார்த்துவிட்டு வா.



கந்தமாறன் வெளியே வந்து எட்டிப்பார்க்கிறான். இருட்டும், புழுதியும் சேர்ந்து கொண்டதால் கீழே என்ன நடக்கிறது என்று அவனால் அறிந்து கொள்ள முடியவில்லை.
கந்தமாறன் தன்னை அடையாளம் காணாததை கண்ட வந்தியத்தேவன்.
இவன் ஏன் திரு திருவென்று முழிக்கிறான், வேண்டுமென்றே என்னை தெரியாதது போல் பாவனை செய்கிறானா? ஒரு வேளை துரோணாச்சாரி, துருபதனின் நட்பை போல் ஆகி விட்டதா எங்கள் நட்பு. அவன் பல முறை அழைத்ததால் தானே கட்டுக்காவலையும் மீறி உள்ளே வந்தேன்.
தொடரும்...

# மாதம் இருமுறை அத்தியாயங்களின் தொடர் வெளியீடு

